முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

“அன்னம் தரும் அமுதகரம்” 205 வது நாள்

திரு.வி.க.நகர் தெற்கு பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை,செப்.13- முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 205 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (12.09.2025), திரு.வி.க நகர் தெற்கு பகுதி: 1) வட்டம் 75 மேடவாக்கம் இரண்டாவது தெரு, கீழ்ப்பாக்கம். 2) வட்டம் 76 அ, சி.எஸ் நகர் குடியிருப்பு, டோபிகானா, பட்டாளம், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியாராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, எம்.சாமி கண்ணு, இசட்.ஆசாத், பி.ஜெ.துளசிங்கம், இரா.வீரமணி, நா.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், கா.ராஜ்முகமது, எஸ்.தமிழ்செல்வி, எஸ்.சசிகுமார், பா.பி.தாஸ், டி.சுரேஷ்குமார் (எ) பொல்லு சுரேஷ், எம்.தமிம், எஸ்.வெங்கடேசன், வி.க.வெங்கடேசன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர். R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றுகிறார்!

குன்றத்தூர் மத்திய - தெற்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

படப்பை ஆ.மனோகரன் –திருமுடிவாக்கம் இ.மணி வேண்டுகோள்!

காஞ்சிபுரம், செப். 13 - குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன், மத்திய ஒன்றியப் பொறுப்பாளர் திருமுடிவாக்கம் இ.மணி ஆகியோர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

குன்றத்தூர் மத்திய மற்றும் தெற்கு ஒன்றிய தி.மு.க. கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 14.09.2025 - ஞாயிற்றுக்கிழமை, காலை 10.00 மணி, தில்லை மகால், படப்பையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தலைமை வகிக்கிறார்.

குன்றத்தூர் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் திருமுடிவாக்கம் இ.மணி வரவேற்கிறார்.

ஒன்றிய கழக நிர்வாகிகள் மு.சுப்பிரமணி, வ.நந்தகோபால், வாசுகிமகேஷ், சி.பார்த்தசாரதி, வி.அரி, மூ.ராஜேந்திரன், மா.பரிமேலழகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் குறு- சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்று கிறார்.

தொகுதி தேர்தல் மேற்பார்வையாளர் மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம். குன்றத்தூர் ஒன்றியக் குழு பெருந்தலைவர் சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் (எ) ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், குன்றத் தூர் ஒன்றியக் குழு துணைப் பொருந்தலைவர் உமாமகேஸ்வரி வந்தேமாதரம் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் குன்றத்தூர் தெற்கு - மத்திய ஒன்றியங்களில் அடங்கியுள்ள மாவட்ட - ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், வாக்குச் சாவடி நிலை முகவர்கள் பி.எல்.ஏ. -2, வாக்குச்சாவடி இ.முக வர்கள் பி.டி.ஏ. உள்ளிட்டோர் அவசியம் தவறாமல் கலந்து கொண்டு இக்கூட்டத்தினை சிறப்பித்திடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ப.அறிவொளி, அ.ஜமீர் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

பொருள்: செப்டம்பர் - 15 பேரறிஞர் அண்ணா அவர்களின் 117ஆவது பிறந்த நாள் விழா,

செப்டம்பர் - 15 பாகம் வாரியாக கூட்டம் மற்றும் உறுதிமொழி ஏற்பு,

செப்டம்பர் 17 கரூரில் முப்பெரும் விழா, கழக வளர்ச்சிப் பணி.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏ.எம்.வி. பிரபாகரராஜா எம்.எல்.ஏ. - க.தனசேகரன் பங்கேற்பு:

கலைஞர் நகர் வடக்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் கூட்டம்!

பகுதிச் செயலாளர் மு.இராசா அறிக்கை!

சென்னை, செப்.13- கலைஞர் நகர் வடக்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் கூட்டம் இன்று நடைபெறுகின்றது என்று பகுதிச் செயலாளர் மு.இராசா அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மு.இராசா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கலைஞர் நகர் வடக்குப் பகுதிக் கழக வட்டச் செயலாளர்கள் கூட்டம் இன்று (13.9.2025-சனிக்கிழமை) காலை 10 மணிக்கு, காமராஜ் சாலையில் உள்ள பகுதிக் கழக அலுவலகத்தில் நடைபெறுகின்றது.

இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

அதுபோது பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா, இளையராஜாவின் பாராட்டு விழாவில் கலந்து கொள்வது மற்றும் முப்பெரும் விழாவில் கலந்து கொள்வது குறித்து ஆலோசிக்கப்படவிருக்கிறது.

எனவே இக்கூட்டத்தில் வட்டச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

121 (அ) வட்ட கழக ஆலோசனை கூட்டம்!

வட்ட செயலாளர் சீ.கிருஷ்ணமூர்த்தி அறிக்கை!

சென்னை, செப்.13- சென்னை தென் மேற்கு மாவட்டம் மயிலை த.வேலு.எம்.எல்.ஏ., அவர்களின் அறிவுறுத்தல்படி, பகுதி செயலாளர் நந்தனம் மதி எம்.சி. முன்னிலையில் 121 (அ) வட்ட கழக அவசர ஆலோசனை கூட்டம் இன்று (13.09.2025) மாலை 6.30 மணியளவில் வட்ட கழக அலுவலகத்தில் அவை தலைவர் எஸ்.கணேசன் தலைமையில், கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளது.

இந்த கூட்டத்திற்கு மாவட்ட நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், BLA2 & BDA மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுகொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் சீ.கிருஷ்ணமூர்த்தி அறிக்கை விடுத்துள்ளார்.

தாம்பரம் மாநகரம் முழுவதும்

முப்பெரும் விழா - வாக்குச்சாவடிகளில் உறுதி மொழி ஏற்பு!

மாநகரக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., வேண்டுகோள்!

தாம்பரம், செப்.13- தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

அறிவுலக மாமேதை அறிஞர் அண்ணா அவர்களின் 117,வது பிறந்தநாள், அறிவு ஆசான் தந்தை பெரியார் அவர்களின் 146,வது பிறந்த நாள், தி.மு.கழகம் உதயமான நாள் ஆகிய முத்தான மூன்று தினங்களையும் உள்ளடக்கிய முப்பெரும் விழா செப்டம்பர் 15 திங்கட்கிழமை அன்று இவ் விழாவினை எழுச்சியுடன் கொண்டாடும் வகையில் தாம்பரம் மாநகரத்திற்குட்பட்ட 10 பகுதிகளிலும், 70 வட்டங்களிலும் காலை 08.00 மணியளவில் கழக கொடியேற்றி அறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப்படத்தை மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, மலர் தூவி மரியாதை செய்து, காலை உணவு மற்றும் எளியோர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், சாலை முழுவதும் கொடி, தோரணங்கள், ஒலி, ஒளி அமைத்து எழுச்சியுடன் நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்திடவும்,

ஓரணியில் தமிழ்நாடு என்ற முழக்கத்தோடு, 1 கோடி குடும்பங்களை நம் கழக உறுப்பினர்களாக இணைத்துள்ளோம். அவர்களை ஒருங்கிணைத்து நமது மாநகரத்தில் உள்ள 869 வாக்குச்சாவடிகளிலும் உறுதிமொழி ஏற்றும், அதன் பிறகு மேற்கு தாம்பரம் அண்ணா பேருந்து நிலைய வளாகத்தில் எனது தலைமையில் காலை 9 மணிக்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்ய உள்ளோம் இந்த நிகழ்ச்சியிலும் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை விடுத்துள்ளார்.

ஏ.வந்தேமாதரம் தலைமை! படப்பை ஆ.மனோகரன் – கழகத்தினர் பங்கேற்பு!

கோவூர் ஊராட்சி முன்னாள் தலைவர் ப.குமரவேல் - ஜலஜா குமரவேல் இல்ல விழா!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் - டி.ஆர்.பாலு எம்.பி. - ஆர்.எஸ்.பாரதி - க.சுந்தர் எம்.எல்.ஏ. வாழ்த்து!

காஞ்சிபுரம், செப். 13 குன்றத்தூர் வடக்கு ஒன்றியம், கோவூர் ஊராட்சி முன்னாள் தலைவர் ப.குமரவேல் ஜலஜா குமரவேல் ஆகியோரின் 50 வது ஆண்டு மணநாள் பொன் விழா மற்றும் சுந்தரவடி வேலு ரஞ்சனி ஆகியோரின் மகள் சு.பிரியாவின் மஞ்சள் நீராட்டு விழா 14.9.2025 ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணியளவில் தனலட்சுமி திருமண மண்டபம் கோவூரில் நடைபெறுகிறது.

விழாவிற்கு ஏ.வந்தே மாதரம் தலைமை வகிக்கின்றார்.

ப.சுதாகர், தா.அன்பழகன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

ஆ.செல்வராஜ், அ.கண்ணதாசன், பா.ராஜேந்திரன், தமிழரசி, சுரேஷ், கே.இ. சீனிவாசன், தமிழ்வாணன், வசந்தகுமார், தனசேகரன், ஜோஸ்பின், கிளாரா, அருள், மகாலட்சுமி, சரவணன், பாபு, சா.வெற்றிவேல், ஆர்.பழனி, கே.பாலாஜி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

விழாவில் குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனத் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், டி.ஆர்.பாலு எம்.பி., ஆர்.எஸ். பாரதி, க.சுந்தர் எம்.எல்.ஏ., ஆகியோர் பங்கேற்று வாழ்த்துகின்றனர்.

இதில் படப்பை ஆ.மனோகரன், மீஞ்சூர் பாஸ்கர்சுந்தரம், சரஸ்வதி மனோகரன், உமா மகேஸ்வரி வந்தேமாதரம், ஏ.மணி, கே.எத்திராஜ், எம்.ஆர்.சீனிவாசன், கோ.சத்தியமூர்த்தி, பட்டூர் எஸ்.ஜபருல்லா, வி.ஹரி, ஒன்றிய கழக நிர்வாகிகள் து.சுந்தர், பொன் ஜீவா, வசீகரன், பூங்கொடி, அரசு, ராஜா, தேசிங்கு, எஸ்.கே.துளசிங்கம், சந்தானம், தி.க.பாஸ்கரன், டி.எஸ்.எம்.ஜெயகரன், டி.ஆர். சாரதி, பெரியநாயகம், சையது சுலைமான் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

பூ.சுந்தரவடிவேலு, இரா.அன்பழகன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

122வது வட்ட ஆலோசனைக் கூட்டம்!

வட்ட செயலாளர் எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார் அறிக்கை!

சென்னை,செப்.13- தென்மேற்கு மாவட்டம், மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி, 122 வது வட்ட அவைத் தலைவர் இ.கே.மதி தலைமையில், மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம். கி.மதி எம்.சி., முன்னிலையில் செப் 15 பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் ஓரணியில் தமிழ்நாடு - வாக்குச் சாவடி அளவிலான உறுதி மொழி முன்மொழிவுக் கூட்டங்கள் குறித்து ஆலோசனை கூட்டம் இன்று 13.09.2025, சனிக்கிழமை, மாலை 700 மணியளவில், ஆழ்வார்பேட்டை தெருவில் உள்ள வட்டச் செயலாளர் அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் 122வது வட்டத்திற்குட்பட்ட மாவட்ட பிரிதிநிதிகள், பகுதி வட்ட கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக பொறுப்பாளர்கள் (BLA2) அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு 122வது வட்ட செயலாளர் எஸ்.ஆர்.ராஜா சுரேஷ்குமார் அறிக்கை விடுத்துள்ளார்.

தொகுதி பார்வையாளர் எஸ். மோகன் பங்கேற்பு!

திருவொற்றியூர் மேற்கு பகுதி சார்பில் ஆலோசனைக் கூட்டம்!

பகுதிச் செயலாளர் வை.ம. அருள்தாசன் அறிக்கை!

சென்னை,செப்.13- திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் அறிக்கை வருமாறு:

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம் 13-9-25 இன்று மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ ஆலோசனையின் பேரில் 13-9-25 சனிக்கிழமை மாலை 5:00 மணியளவில் ராமகிருஷ்ண நகர் 3 வது தெருவில் உள்ள பகுதி கழக அலுவலகத்தில் பகுதி கழக அவைத்தலைவர் ந.திருசங்கு தலைமையில் நடைபெறுகிறது.

இதில் மாநில வர்த்தக அணி துணைத் தலைவர் திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர்

தி. நகர் எஸ். மோகன் அவர்கள் பங்கேற்று ஆலோசனை வழங்க உள்ளார்.

அதுசமயம் முன்னாள் - இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள்,மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள்,பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள்,மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள்,பாக முகவர்கள், BLA&2, BLC, BDA மற்றும்

கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறன் :!

பொருள்:-

1. 15-9-25 பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா!

2. ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை!

3. 17-9-25 அன்று கரூரில் நடைபெறும் முப்பெரும் விழா,

4.கழக ஆக்க பணிகள்.

மேற்கண்டவாறு திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர்

வை.ம.அருள்தாசன் அறிக்கையில் தெரிவித்தள்ளார்.

பராமரிப்புப் பணிக்காக மண்டலம் 6-ல்

கழிவு நீரிறைக்கும் நிலையம் செயல்படாது!

சென்னை குடிநீர் வாரியம் தகவல்

சென்னை,செப்.13- பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் கணேசபுரம் வியாசர்பாடி ஜீவா ரயில் நிலைய சுரங்க பாதை மேம்பால கட்டுமான பணிகளுக்காக, டாக்டர் அம்பேத்கார் கல்லூரி சாலையில் உள்ள 1050 மி.மீ விட்டமுடைய கழிவுநீர் பிரதான உந்து குழாய் மாற்றி அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் 15.09.2025 அன்று மதியம் 2 மணி முதல் 16.09.2025 அன்று இரவு 8 மணி வரை (30 மணி நேரம்) மண்டலம்-6-க்குட்பட்ட புரசைவாக்கம் கழிவு நீரிறைக்கும் நிலையம் தற்காலிகமாக செயல்படாது.

எனவே, இராயபுரம், திரு.வி.க நகர், அண்ணா நகர், தேனாம்பேட்டை மண்டலங்களுக்குட்பட்ட இடங்களில் கழிவுநீர் தொடர்பான புகார்களுக்கு கீழ்க்காணும் பகுதி அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

வ. எண் மண்டலம் பகுதிப் பொறியாளர் / துணை பகுதிப் பொறியாளர் கைபேசி எண்கள் கழிவுநீர் உந்து நிலையங்கள் 1. மண்டலம் - 5 (இராயபுரம்) 8144930905 8144930255 லாங்ஸ் கார்டன், நேப்பியர் பூங்கா, வால்டாக்ஸ் சாலை 2. மண்டலம் - 6 (திரு.வி.க நகர்) 8144930906 8144930216 8144930217 அயனாவரம், ஏகாங்கிபுரம், பெரம்பூர், செம்பியம் 3. மண்டலம் - 8 (அண்ணா நகர்) 8144930908 8144930258 சேத்துப்பட்டு, சாஸ்திரி நகர், கீழ்ப்பாக்கம், சுந்தரம் தெரு, ஷெனாய் நகர், ஓசான்குளம் 4. மண்டலம் - 9 (தேனாம்பேட்டை) 8144930909 8144930111 கிரீம்ஸ் சாலை.

எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தலைமை!

தாம்பரம் ஜி.மணி இல்ல மணவிழா வரவேற்பு!

கழக முன்னணியினர் வாழ்த்து!

தாம்பரம், செப்.13- தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ தலைமையில் பகுதி கழகச் செயலாளர்கள் மண்டல குழு தலைவர்கள் டி.காமராஜ், எஸ். இந்திரன், ஆகியோரின் முன்னிலையில் தாம்பரம் மாநகரம் 33.வது வட்ட செயற்குழு உறுப்பினர் ஜி.மணி - வசந்தி ஆகியோரின் இல்லத் திருமண வரவேற்பு விழா 14.9.2025 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி அளவில் மேற்கு தாம்பரம் ராஜகோபால் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது. விழாவிற்கு மாமன்ற உறுப்பினர் உறுப்பினர் செ.சுரேஷ், வட்ட கழக செயலாளர் எம்.வினோத் ஆகியோர் வரவேற்கின்றனர்.

விழாவிற்கு கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் - குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ் மற்றும் மாவட்ட, மாநகர, பகுதி, கழக நிர்வாகிகள் அணியின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

125வது வட்டம்:

பாக பொறுப்பாளர் சங்கர் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, செப்.13 மயிலை கிழக்கு பகுதி 125வது வட்டம் பாஷா தோட்டம் 137-வது பாக பொறுப்பாளரும், வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ். மணிகண்டன் அவர்களின் தந்தை கழக மூத்த முன்னோடி சங்கர் அவர்கள் நேற்று (12.9.2025) மாலை இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் 125-வது வட்ட கழகத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் மறைவு செய்தியறிந்து கழகத்தினர் அவரது உடலுக்கு மலர் மாலைகள் வைத்து அஞ்சலி செலுத்தினர். அன்னாரின் உடல் இன்று (13.9.2025 சனிக்கிழமை) மாலை மயிலாப்பூர் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படும்.

டி.ஆர்.பாலு எம்.பி, அமைச்சர் தா.மோ.அன்பரசன், எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ-வாழ்த்துரை!

பழைய பெருங்களத்தூர் வர்த்தகர் அணி: என்.ராஜா - சூர்யகுமாரி இல்ல மணவிழா!

மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் ஜி.காமராஜ், எஸ்.சேகர், டி.காமராஜ், ஆர்.எஸ்.சங்கர் பங்கேற்பு!

சென்னை. செப். 13- செங்கல்பட்டு மாவட்டம், பழைய பெருங்களத்தூர். வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் என்.ராஜா. திருமதி. சூர்யகுமாரி அவர்களின் இளைய மகன் இளைஞரணியை சார்ந்த ஆர்.விக்னேஷ். காஞ்சிபுரம் மாவட்டம். ஸ்ரீ பெரும்புதூர் வட்டம். எம்.இஜேந்திரன் திருமதி. தேவி அவர்களின் மூத்த மகள் ஆர்.ரவீனா. ஆகியோரின் திருமணம் 14.09.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 4.30 மணிக்குமேல் 6.00 மணிக்குள் சென்னை பழைய பெருங்களத்தூர் முடிச்சூர் ரோட்டில் அமைந்துள்ள ஸ்ரீ பத்மாவதி மஹாலில் நடைபெறுகிறது.

இதில் கழகப் பொருளாளரும் நாடாளுமன்ற குழுத்தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி. அமைச்சரும் காஞ்சிபுரம் வடக்குமாவட்ட செயலாளர் தா.மோ.அன்பரசன். தாம்பரம் மாநகர செயலாளரும். சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.ஆர்.ராஜா. வாழ்த்துரை வழங்குகின்றனர்.

தாம்பரம் மேயர் திருமதி.வசந்தகுமாரி, துணைமேயர் ஜி.காமராஜ். பெருங்களத்தூர் தெற்குபகுதி செயலாளர் எஸ்.சேகர். எம்.சி. 4வது மண்டலக்குழு தலைவர் டி.காமராஜ். தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஆர்.எஸ்.சங்கர் ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் இளைஞரணி அமைப்பாளர் பா.சுந்தர். ஜசக். ஜெயதுரை. எஸ்.கணேசன். கோவிந்தராஜ். விஜய். ஆனந்த். குமரவேல். பி.சுரேஷ். எம்.ராஜேந்திரன். தேவி. சுப்பிரமணி. கிரிஜா. கஜேந்திரன். காந்திமதி. ஆர்.ரவிக்குமார். ஆர்.ரவி. திருமதி.ரேவதி புகழேந்தி. ஆர். அமுல்ராஜ். மாலினி. என்.மணி வண்ணன். வெங்கடலட்சுமி. என்.மதியழகன். சாந்தி. என்.குணசேகர். கவிதா. ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

வரவேற்பு: இன்று 13.09.2025 சனிக்கிழமை. டி.ஜெ.இன்னிசை நிகழ்ச்சி நடைபெறுகின்றது. மாலை 6.30 மணிக்கு. மாலை

முரசொலி முகவர் பி.புகழேந்தி எம்.சி. தெற்குப்பகுதி துணைசெயலாளர் திருமதி ரேவதி புகழேந்தி மற்றும் குடும்பத்தினர் அனைவரையும் வரவேற்கின்றனர்.

சென்னை தென்மேற்கு மாவட்ட பிரதிநிதி

கே.வி.சுதர்சன் தந்தை கிருஷ்ணமூர்த்தி நினைவு நாள்-உணவு வழங்கல் !

கழகத்தினர் பங்கேற்பு !

சென்னை செப்:13 சென்னை தென் மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் பகுதி,மாவட்ட பிரதிநிதி கே.வி. சுதர்சன் அவர்களின் தந்தையும் முன்னாள் பகுதி பிரதிநிதி,கழக முன்னோடி மறைந்த ஜி.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி (இன்று எண்: 25, 11 வது தெரு,புதூர் அசோக் நகர் இல்லத்தில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சியில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம். எல்.ஏ, தியாகராயர் நகர் பகுதி கழகச் செயலாளர்கள் ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ,கே. ஏழுமலை எம்.சி ஆகியோர் பங்கேற்று அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்து கின்றனர்.

இதில் முன்னாள் பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் வீரமணி கிருஷ்ணமூர்த்தி முன்னாள் பகுதி இலக்கிய அணி இ. பச்சையப்பன், முன்னாள் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் கே. ஆனந்தவேல்,ஏ. ஆனந்தன் உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்று புகழ்அஞ்சலி செலுத்து கின்றனர்.

நிகழ்ச்சியில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழகப் பிரதிநிதி கே. வி.சுதர்சன் ஏற்பாட்டில் அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்கு பகுதி அவைத் தலைவர் சி.பழனி தலைமையில் பகுதிக் கழகப் பொறுப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. முன்னிலையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் மற்றும் முப்பெரும் விழா குறித்து ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில் வேளச்சேரி பெ.மணிமாறன் எம்.சி, நிவேதா ஜெசிக்கா, சாய் ஐயெகாந்த், கழக த.ரமேஷ், த.ஜெகதீசன், எஸ்.தியாகராஜன், பொ.த.எழில்வாணன், சே.மைதிலி, பொ.த.மதிவாணன், த.பார்த்திபன், கே.என்.தாமோதரன், தே.கோபி, எஸ்.முருகவேல், க.பாரதிதாசன், வி.சக்திவேல் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு அவழிகாட்டலின்படி, எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டுக்கு உட்பட்ட புல்லாபுரம் பகுதியில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டுமான பணிக்கான அடிக்கல் நாட்டு நிகழ்வில், தி.மு.க. அயலக அணி மாநிலத் துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி அவர்கள் கலந்துகொண்டு அடிக்கல் நாட்டினார், உடன் துப்புரவு ஆய்வாளர் ஏ.தினகரன், பள்ளி ஆசிரியர்கள், மற்றும் மாணவச் செல்வங்கள் இருந்தனர்.